<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**OS** 298/2009

2024-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திருமதி.கே.கிருஷ்ணபிரியா, எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 04.09.2024

Pw1 (செல்வி)

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி (வீடியோ கான்பரன்ஸ் வழியாக விசாரணை செய்யப்பட்டது)**

அகில இந்திய மனித உரிமை கழகம், ஈரோடு மாவட்டம் அரசு பதிவு எண் 46/2005 ன் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் போஸ்டரில் மேலிருந்து கீழ் 2வதாக உள்ள எஸ் கே சதாசிவம் என்பது என் கணவருடையது என்றும், 3வது வரிசையில் 4வதாக செல்வி என்று உள்ள புகைப்படம் என்னுடையது என்றும் சொன்னால் அந்த புகைப்படம் என்னுடையதல்ல, எஸ் கே சதாசிவம் என்ற புகைப்படத்தில் உள்ளது என் கணவரை போன்று உள்ளார், ஆனால் அவர் தானா என்று என்னால் உறுதியாக சொல்ல முடியவில்லை, எஸ் கே சதாசிவம் என்ற பெயருக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அலைபேசி எண் என் கணவருடையதாகும். வழக்கிற்காக அந்தபுகைப்படங்கள் என்னுடைது மற்றும் என் கணவருடையதல்ல என்று மறுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. 05.01.2002 ம் தேதி என் கணவர் கைப்பட 25.10.2001 அன்று 2லட்சம் பெற்றுக் கொண்டதை பெற்றுக் கொண்டு கைப்பட எழுதி கொடுத்த ஆவணம்தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படுவது என்றால் சரியல்ல, என் கணவர் இப்படி ஒரு ஆவணம் எழுதி கொடுக்கவில்லை. மேற்படி என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ளது என் கணவருடைய கையொப்பம் தான் என்றும், அதை மறுத்து வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அகில இந்திய மனித உரிமை கழக ஈரோடு மாவட்ட அரசு பதிவு எண் 46/2005 ஆவணங்களில் உள்ள கையொப்பத்தையும் 05.01.2002 ம் தேதி கணக்கு எழுதி கொடுக்கப்பட்டுள்ள

கையொப்பம் உள்ள ஆவணத்தையும் எங்களால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள என் கணவரின் கையொப்பங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் உண்மை தெரிந்து கொள்ளலாம் என்றால் சரி, எனக்கு ஆட்சேபணை இல்லை.

இந்த குறுக்கு விசாரணை வாதி தரப்பு வழக்கறிஞர் திரு. வி. ஜெகதீசன் முன்னிலையிலும், பிரதிவாதி தரப்பு இளைய வழக்கறிஞர் திரு. எஸ் சதீஸ்குமார் முன்னிலையிலும், Micro soft Teams ல் இந்நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள தனி லிங்க் மூலமாக வீடியோ கான்பரன்ஸ் ல் இணைந்த பிரதிவாதி தரப்பி மூத்த வழக்கறிஞர் திரு. பி. மோகன் , வாசா1 ஐ வீடியோ கான்பரன்ஸ் மூலம் குறுக்கு விசாரணை செய்தார். அவரது குறுக்கு விசாரணைக்கு இளைய வழக்கறிஞர் திரு. சதீஸ் குமார் சாட்சியிடம் ஆவணங்கள் காண்பித்து உதவி புரிந்தார்.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

Sd/-K.Krishna Priya, 4.9.24
Subordinate Judge,
Perundurai.

uploaded by SS